2012 பிப்ரவரி 2]

27—

மருத்துவக் கருவிகள்

***2081—திரு. என்.டி. வெங்கடாச்சலம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெருந்துறையில் சாலைப் போக்குவரத்து நிறுவன கட்டுப்பாட்டின்கீழ் இயங்கிவரும் மருத்துவக் கல்லூரியில் நரம்பியல் துறைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் இ.இ.ஜி. கருவிகள் வழங்கவும், சிறப்பு அறுவை சிகிச்சை மருத்துவரை நியமிக்கவும் அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுடைய பிள்ளைகள் மருத்துவர்களாக, பொறியாளர்களாக உருவாகவேண்டும் என்பதற்காக, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்காக 1992–1993 ஆம் ஆண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் குரோம்பேட்டை, பர்கூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் பலதொழில்நுட்பக் கல்லூரிகளும், 1984 ஆம் ஆண்டு புரட்சித் தலைவர் அவர்களால் ஈரோட்டில் பொறியியல் கல்லூரியும், 1986 ஆம் ஆண்டு பெருந்துறையில் மருத்துவக் கல்லூரியும் சாலைப் போக்குவரத்து நிறுவனத்தின்மூலம் தொடங்கப்பட்டு இதுவரை 6,742 பொறியாளர்களும், 1,072 மருத்துவர்களும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சி.டி. ஸ்கேன் மற்றும் இ.இ.ஜி. உபகரணங்கள் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளன. மேலும் 7 மருத்துவர்களைக்கொண்ட அறுவை சிகிச்சைப் பிரிவும் சிறப்பாக இயங்கி வருகிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.*

திரு. என்.டி. வெங்கடாச்சலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா*

அவர்களின் பொற்கால ஆட்சியில் விலையில்லாத அரிசி தந்து மக்களின் பசிப் பிணியைப் போக்கியதுபோல, நோயுற்ற மக்களின் துயர் துடைக்க போர் முனையில் வீரர்களுக்கு மருத்துவப் பணியாற்றிய ஃப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் போல, எப்பொழுதெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சி தமிழகத்தில் அமைகின்றதோ அப்பொழுதெல்லாம் மக்கள் புதிய திட்டங்களைப் பெறுகின்றார்கள்.

அதுபோல தமிழக மக்களுக்காக விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் கொண்டுவந்து, தமிழக மக்களுடைய பிணியைப் போக்கி வருகின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களை விசுவாசத்துடன் பணிந்து வணங்குகிறேன். சாலைப் போக்குவரத்துத் துறை மூலமாகச் செயல்படும் பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையானது, சேலம்–கோயம்புத்தூரை இணைக்கின்ற நான்குவழி தேசிய நெடுஞ்சாலையிலே அமைந்திருக்கின்ற காரணத்தினாலே, விபத்துகள் ஏற்படுகின்றபோது உடலில் முதலிலே அடிபடக்கூடிய பகுதி தலைப்பகுதி என்பதாலே, தினமும் 200 நோயாளிகள் வருகின்றனர். ஆனால், தலை சம்பந்தமான பகுதியை ஆய்ந்து அறியும் சி.டி. ஸ்கேன் கருவி 5–10–2011 முதல் பழுதடைந்துள்ளது.

எனவே, நரம்பு சம்பந்தமான மருத்துவர்களை நியமிக்கவும், இருதயம் (கார்டியாலஜி) சம்பந்தமான மருத்துவர்களை நியமிக்கவும், அதுமட்டுமல்லாமல் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை இந்த மருத்துவமனையிலே செயல்படுத்தவும் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் தலைமையிலான இந்த சிறப்பான அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெருந்துறை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலே பழுதடைந்துள்ள சி.டி. ஸ்கேன் கருவி தற்போது சரிசெய்யப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றது. மேலும் மருத்துவப் பணியிடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். பெருந்துறை மருத்துவமனையில் மருத்துவர் காலிப் பணியிடங்கள் குறித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய

2012 பிப்ரவரி 2]

அரசால் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

28—

தரம் உயர்த்துதல்

*__6211—திரு. ம. முத்துராமலிங்கம்:__

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி 24 மணி நேர ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகளுடன் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கிராமப்புற மக்களின் நல்வாழ்வினைக் கருத்தில்கொண்டு, கடந்த மாதம் 20 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தொடங்கி வைத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், 38 ஆரம்ப சுகாதார நிலையங்களை, மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாகத் தரம் உயர்த்தி அனுமதியும் வழங்கியுள்ளார்கள்.

விடை—

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதி, கள்ளிக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கின்ற கள்ளிக்குடி பிரதான ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்தி 30 படுக்கைகள் வசதியுடன் விரிவாக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் கட்டுமானப் பணிகள் பொதுப் பணித் துறையின்மூலம் தொடங்கப்படவுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.